OS.13/2020

Dated.06.06.2023

Name : கோட்டை ஈஸ்வரன்

Time: 12.15 pm

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

1. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். தவசியணத்தேவரின் கொடி வழி ஜாபிதா இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

2. என் தாத்தா தவசியணத்தேவருக்கு என் அப்பா நிறைகுளத்தான் என்ற அய்யனாரைத் தவிர தெய்வாணை என்ற வாரிசு இருந்தார் என்றால் சரிதான். தற்போது அவர் உயிருடன் இல்லை. அவருக்கு திருமணம் முடிந்த 2 ஆண்டுகளில் இறந்து விட்டார். அவருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை.

3. என் அப்பா 1998ம் ஆண்டு இறந்தார். எனக்கு உடன்பிறந்த 3 சகோதரிகள் உள்ளனர். அவர்கள் பேச்சியம்மாள், தெய்வாணை, கோட்டையம்மாள் ஆவார்கள். பேச்சியம்மாள் மற்றும் கோட்டையம்மாள் இறந்து விட்டார்கள்.

4. பேச்சியம்மாளுக்கு சித்ராதேவி, தெய்வக்குமார் என்ற பெயரில் இரண்டு குழந்தைகள் உள்ளனர். கோட்டையம்மாளுக்கு தேவயாணி என்ற பெண் மகள் உள்ளார். எனது வழக்குரையில் எனது அப்பாவின் வாரிசுகள் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. என் தாத்தா 24 வயதில் இறந்து விட்டார். அப்போது என் அப்பாவிற்கு 5 வயது இருக்கும். வா.சா.ஆ.1 வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன்.

6. என் தாத்தா இறந்த பின்பு செட்டில்மெண்ட் ஆவணம் பிரதிவாதிகளின் தந்தை பெயரில் மோசடியாக ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த மோசடி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. 21.03.1967 ம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்ததாக வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் பிரதிவாதிகள் வசம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனை பிரதிவாதிகளிடமிருந்து பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் கேட்ட போது அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

8. நான் கூறுவது போல் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை மூலம் எனது தாத்தா தவசியணத்தேவருக்கு எந்தெந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை.

9. பிரதிவாதிகளின் தந்தைக்கு எந்தெந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் என் அப்பா எந்தெந்த சொத்துக்களை விற்றார் என்ற விபரத்தை என்னால் கூற இயலும்.

10. என் அப்பா என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் எங்கள் குடும்ப செலவிற்காகவும், எனது சகோதரிகளின் திருமண செலவிற்காகவும் விற்றார் என்றால் சரியல்ல.

11. என் தாத்தாவிற்கு குறைவான பாகம் ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். குறைவான பாகம் ஒதுக்கப்பட்டது குறித்து எனது தாத்தாவும், எனது அப்பாவும் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் எனது அப்பாவிற்கு பாத்தியம் என்று என் அப்பா வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

12. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்கள் 1, 2 இலக்க சொத்துக்களுக்கு வழங்கப்பட்ட சர்வே நோட்டீஸ் என்றால் சரிதான். சர்வே நோட்டீஸிற்கு ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 3 வது இலக்க சொத்தை பொறுத்து வா.சா.ஆ.4 வரி இரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

13. வரி இரசீது யாருடைய பெயரில் ஏற்பட்டது என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை என்றால் சரியல்ல. நிறைகுளத்தான் என்று என் அப்பாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

14. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கை நிரூபிக்க போதுமானவையாக இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான்.

15. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்து காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

16. நான் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.